<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

CASE NO. SC. No. 54/2023

Prosecution witness PW - 2

| | | |
|---|---|---|
| Name | …. | Kuralarasan |
| Father's Name | .... | Kumar |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 19th day of September 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது செய்யாறு வட்டம், புதுக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கிரஷரில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.11.2022 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு நாவல்பாக்கம் மதுபான கடை அருகில் மது அருந்திகொண்டிருந்தபோது விக்ரமன் நண்பர்கள் கௌதம் மற்றும் ஆனந்தராஜ் வந்திருந்தார்கள். அவர்களுடன் விக்ரமன் பேசிக்கொண்டிருந்தபோது நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது கௌதம் என்பவர் விக்ரமனை பார்த்து தேவிடியா பையா இங்கு ஏண்டா வந்தாய் என்று விக்ரமன் தலை, மூக்கு, இடது கை மற்றும் தொடையில் கட்டையால் அடித்தார். அது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டை தான். அதன்பின்பு விக்ரமன் என்பவரை நெருப்பில் தள்ளிவிட்டார். நாங்கள் விக்ரமனின் அம்மா பரிமளா

என்பவருக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொல்லி அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். பின்பு செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அழைத்துகொண்டு சேர்த்தனர். அதன்பின்பு மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக ஒருமாத காலம் சிகிச்சை பெற்று வந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஆனந்த் என்னுடைய நண்பர் அவர் 8ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்புவரை என்னுடன் படித்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாக மதுபோதையில் இருந்தோம் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு தான் வசந்த் எங்களுடன் இருந்தார். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளவாறு போலிசார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், வசந்த், ஆனந்த் ஆகியோர்கள் எதிரிகளை தாக்கியதாகவும் எதிரிகள் போலிசாரிடம் புகார் கொடுத்துவிடுவார்கள் என்று பயந்து நாங்கள் முதலில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் குப்பைமேட்டில் தள்ளிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது அவ்வாறு குப்மைமேடு எதுவும் இல்லை என்றும் அவ்வாறு இருந்தால் வழக்கில் மாதிரி வரைபடத்தில் சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

CASE NO. SC. No. 54/2023

Prosecution witness PW - 1

| | | |
|---|---|---|
| Name | …. | Vickraman |
| Father's Name | .... | Sivalingam |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 19th day of September 2025.

( எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

நான் தற்போது பொள்ளாச்சியில் கிரஷர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.11.2022 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு சம்பவம் நடந்தது. நாவல்பாக்கம் மதுபான கடை அருகில் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திக்கொண்டிருந்தபோது அப்போது என் நண்பர் கௌதம் என்பவர் வந்தார். அவரை பார்த்து எப்படி இருக்கிறீர் என்று கேட்டேன். அப்போது நன்றாக இருப்பதாக சொன்னார். எப்போதும் இங்கேயே இருக்கிறியே என்று கௌதம் என்பவர் என்னிடம் கேட்டார். அப்போது உனக்கு வேர வேலையில்லையா தேவிடியாக பசங்களாக என திட்டினார். ஏன் இப்படி அசிகங்கமாக திட்டுர என

கேட்டதற்கு என்னை கட்டையால் அடித்தார். என்னிடம் காட்டப்படும் கட்டையில் தான் தலை, மூக்கு, மற்றும் இடது கைகளில் கௌதம் மற்றும் அவரது நண்பர்களும் சேர்ந்து அடித்தார்கள். அடித்தவுடன் நெருப்பில் போய் விழுந்து விட்டேன். என் நண்பர் குரலரசன் வந்து காப்பாற்றி நாவல்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அதன்பின்பு செய்யாறு அரசு மருத்துவனையில் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கு ஒருவாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது **அ.த.சா.ஆ.** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நானும் எதிரிகளும் மதர்சன்ஸ் என்ற நிறுவனத்தில் ஒன்றாக 3 மாதம் வேலை பார்த்துவந்தேன் என்றால் சரிதான். நானும் எதிரியும் ஒரே ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். நாவால்பாக்கம் மருத்துவமனைக்கு இரவு 7.30 மணியிருக்கு சென்றோம் என்றால் நான் மயக்கமாக இருந்ததால் நேரம் குறிப்பிட்டு தெரியாது. வேலூர் மருத்துவமனையில் இருக்கும்போது என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் விசாரணையில் என்னை எதிரிகள் எங்கு அடித்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியவாறு தான் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். எழுதிய பேப்பரில் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் இல்லை நான் சொல்லி தான் எழுதினார்கள். சம்பவத்தின்போது நான் மது அருந்தியிருந்தேன் என்றால் சரிதான். வசந்த் என்பவர் சம்பவத்தின்போது இருந்தாரா என்றால் அவர் சம்பவத்திற்கு முன்பே சென்றுவிட்டார். நானும் வசந்த் மற்றும் குரலரசன் ஆகியோர் எதிரிகளை தாக்கியதாகவும் எதிரிகள் போலிசாரிடம் புகார்

கொடுத்துவிடுவார்கள் என்று பயந்து நாங்கள் முதலில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல.